**மாகாணக் கல்வித்திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018**

**தரம்: 11** **நேரம்: 3 மணி**

**சைவநெறி**

**சுட்டெண்: ......................................**

- **மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1) "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி" என்று இறைவனை விழித்தவர்
 1. சேந்தனார் 2. உமாபதிசிவம் 3. திருநாவுக்கரசர் 4. செல்லப்பாசுவாமிகள்

2) ஜீவகாருண்யன் என்று திருமுறைகள் போற்றும் தெய்வம்
 1. ஆஞ்சநேயர் 2. வைரவர் 3. சிவபெருமான் 4. திருமால்

3) 2018ம் ஆண்டின் பெயர்
 1. ஏவிளம்பி 2. துன்முகி 3. மன்மதவருடம் 4. விளம்பி

4) விளக்கீடு காணாது போதியோ பூம்பாவாய் என்று பாடியவர்
 1. திருநாவுக்கரசர் 2. திருஞானசம்பந்தர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

5) சிவபெருமானுக்குரிய நட்சத்திரம்
 1. அச்சுவினி 2. மகம் 3. திருவாதிரை 4. சதயம்

6) பாவத்தின் கிரகம் என்று அழைக்கப்படுபவர்
 1. சூரியன் 2. சந்திரன் 3. இந்திரன் 4. சனிபகவான்

7) வடபாரதத்தில் தீபாவளி எத்தனை நாட்கள் கொண்டாடப்படுகிறது
 1. ஒரு நாள் 2. மூன்று நாள் 3. ஐந்து நாள் 4. எட்டு நாள்

8) திருமணத்தின் போது உடலாலும் உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்பதை தெரியப்படுத்த செய்யப்படுவது
 1. கன்னிகாதானம் 2. பால்பழம் புசித்தல் 3. பாணிக்கிரணம் 4. மாலை மாற்றுதல்

9) வேதங்கள் மனிதராலே ஆக்கப்படாமையினால் அதற்கு வழங்கப்பட்ட பெயர்
 1. எழுதாமறை 2. அபௌருசேயம் 3. சுருதி 4. எழுதாகிளவி

10) நாகவழிபாட்டிற்கு வித்திட்ட வேதம்
 1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம்

11) பெரியபுராணத்தில் உள்ள சருக்கங்கள்
 1. 10 2. 11 3. 12 4. 13

12) திருநாவுக்கரசருக்கு குருதீட்சை அளித்தவர்
 1. புனிதவதியார் 2. திலகவதியார் 3. மங்கையற்கரசியார் 4. இசைஞானியார்

Education கல்வி අධ්‍යාපන

13) பஞ்சகிருத்தியங்களில் கொடியேற்றம் எதனைக் குறிக்கிறது
1. படைத்தல் 2. காத்தலி 3. அழித்தல் 4. மறைத்தல்

14) நாவுக்கரசரை சமணர்கள் நீற்றறையில் அடைத்த போது பாடிய பாடல்
1.''தளிரிள வளரொளி..'' 2. ''சுண்ணவெண் சந்தண…''
3. ''மாசில் வீணையும்……'' 4. ''மந்திரமாவது நீறு ……''

15) ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர்
1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரர் 3. திருநாவுக்கரசர் 4. மாணிக்கவாசகர்

16) ஆடிச்சுவாதியில் முத்தியடைந்த சமய குரவர்
1. சுந்தரமுர்த்திநாயனார் 2. திருநாவுக்கரசர்
3. மாணிக்கவாசகர் 4. திருஞானசம்பந்தர்

17) வாதவூரர் விளம்பிட அம்பலவன் எழுதியது
1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருவிசைப்பா 4. திருப்பல்லாண்டு

18) சதமணித்திரட்டு என்ற நூலை எழுதிய சந்தானகுரவர்
1. மெய்கண்டதேவர் 2. அருணந்திசிவாச்சாரியார்
3. மறைஞானசம்பந்தர் 4. உமாபதிசிவம்

19) திருமந்திரத்திலுள்ள தந்திரங்களின் எண்ணிக்கை
1. ஆறு 2. ஏழு 3. எட்டு 4. ஒன்பது

20) திருமந்திரத்தின் பிழிந்த சாரமாக விளங்குவது
1. அன்பேசிவம் 2. சிவாயநம 3. பக்தி 4. சரவணபவ

21) குமாரவேல் நவமணிமாலை என்ற நூலின் ஆசிரியர்
1. திருமூலர் 2. சுவாமி விபுலானந்தர் 3. விவேகானந்தர் 4. சிவபாதசுந்தரனார்

22) குருவழிபாட்டின் மூலம் முத்தியடைந்தவர்
1. திருமூலர் 2. திருநீலகண்டார் 3. சிறுத்தொண்டர் 4.இளையான்குடிமாற நாயனார்

23) சங்கார ருத்திரமூர்த்தி என சிறப்பிக்கப்படும் தெய்வம்
1. வீரபத்திரர் 2. முருகன் 3. பிள்ளையார் 4. வைரவர்

24) களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தலவிருட்சம்
1. மாமரம் 2. மாதுளை மரம் 3. விலவமரம் 4. வேம்பு

25) ''குலப்பண்டிகை'' என்ற பெயரால் அழைக்கப்படும் விரதம்
1. வரலட்சுமி 2. நவராத்திரி 3. கேதாரகௌரி 4. கார்த்திகை விளக்கீடு

26) சயந்தன் எந்த வடிவம் தாங்கி சீதைமீது அங்கசேட்டை செய்தான்
1. நரி 2. புறா 3. காகம் 4. கிளி

27) தாலியை விற்று இறைசேவை செய்த அடியவர்
1. திருமூலர் 2. நமசிவாய தேசிகர் 3. அரிச்சந்திரன் 4.குங்குலியகலயர்

kalvi.lk

28) கும்பாபிசேகம் எத்தனை ஆண்டுக்கொரு முறை நடைபெறும்
1. 12 2. 14 3. 16 4. 18

29) தீண்டாதிருந்த பாம்பை தீண்டி இறக்கச்செய்தவர்
1. அருணந்தி சிவம் 2. உமாபதிசிவம் 3. மறைஞானசம்பந்தர் 4. மெய்கண்டதேவர்

30) அருணகிரிநாதருக்கு முருகன் வழங்கிய தீட்சை
1. திருவடிதீட்சை 2. சாம்பவ தீட்சை 3. சாத்திர தீட்சை 4. வாசகதீட்சை

31) ஆறுமுகநாவலர் "தேன்பொந்து" என்று சிறப்பித்த தலம்
1. திருக்கேதீச்சரம் 2. திருக்கோணேச்சரம் 3. முன்னேச்சரம் 4. நகுலேச்சரம்

32) ஆன்ம தத்துவங்களின் எண்ணிக்கை
1. 05 2. 07 3. 24 4. 36

33) சயந்தனை சிறையிலிருந்து மீட்டுவர முருகன் அனுப்பியது
1. ஆஞ்சநேயரை 2. வீரவாகு தேவரை 3. துவாரபாலகரை 4. வைரவரை

34) இல்லங்களில் தீபமேற்றும் போது பாடவேண்டியது
1. "இல்லக விளக்கது ….." 2. "ஒளிவளர் விளக்கே…"
3. "அன்னம்பாலிக்கும்…" 4. "எல்லா உலகமும் ஆனாய் நீயே…"

35) 'ஒப்புரவு ஒழுகு' என்று கூறியவர்
1. ஔவையார் 2. பாரதியார் 3. ஆறுமுகநாவலர் 4. விபுலானந்தர்

36) 'ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கு செல்லவில்லை என்றால் பள்ளி அவர்களிடம் செல்ல வேண்டும்' என விரும்பியவர்
1. விபுலானந்தர் 2. ஆறுமுகநாவலர் 3. விவேகானந்தர் 4. நமசிவாய தேசிகர்

37) சனிபகவானால் பீடிக்கப்படாதவர்
1. ஆஞ்சநேயர் 2. சிவபெருமான் 3. வைரவர் 4. பிள்ளையார்

38) நாலாயிரம் திவ்வியப் பிரபந்தத்தை தொகுத்தவர்
1. நம்பியாண்டார் நம்பி 2. இராஜராஜ சோழன்
3. ஸ்ரீமத்நாதமுனிவர் 4. வியாசர்

39) பிரம்மவேதம் பிற்காலத்தில் எதற்கு வித்திட்டது
1. ஆயுள்வேத வைத்தியம் 2. இயற்கைத் தெய்வ வழிபாடு
3. அர்ச்சனை வழிபாடு 4. இசைமூலமான வழிபாடு

40) ஆலயங்களில் நடைபெறும் செயல்களில் விரும்பத்தக்கது
1. அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கியை ஒலிக்க விடல்
2. கேளிக்கையான நிகழ்வுகளை நடாத்துதல்
3. அன்னதானம் செய்வது
4. சத்தமாக வெடி கொழுத்துவது

(40 x 1 = 40 புள்ளிகள்)

Education கல்வி அத்யாபன

## பகுதி - II

- **முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) **பின்வருவனவற்றுக்கு விடை தருக.**

   i. இறைவனின் உருவத்திருமேனிகள் நான்கையும் தருக.

   ii. பாடசாலைகளில் இந்துமன்றம் அமைந்திருப்பதால் நீர் அடையும் நன்மைகள் இரண்டு தருக.

   iii. பிண்டம் தயாரிக்க தேவையான பொருட்கள் நான்கு தருக.

   iv. திதிகள் நான்கு தருக.

   v. நந்தியின் கால்கள் நான்கும் எதனைக் குறிக்கும்.

   vi. கும்பாபிசேகம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.

   vii. ஆறுமுகநாவலரின் சமூகப் பணிகள் இரண்டு தருக.

   viii. அந்தக்கரணங்கள் நான்கையும் தருக.

   ix. சைவநாற்பாதங்களை தாயுமானவர் எதற்கு ஒப்பிடுகின்றார்?

   x. வேதத்தின் பிரிவுகள் நான்கையும் தருக. (10x2 = 20 புள்ளிகள்)

Education கல்வி அத்யாபன

2) பின்வரும் அருட்பாக்களில் **இரண்டை** வரிக்கிரமமாக எழுதுக. அப்பாடலின் பொழிப்புரையினைத் தருக.

   i. "மீளா அடிமை உமக்கே ......."   ii. "நாமார்க்குங் குடியல்லோம் ........."

   iii. "உற்றுமை சேர்வது ........."   iv. "உண்ணுஞ் சோறு ....."

(5x2 = 10 புள்ளிகள்)

3) **"கடவுள் என்ற சொல்லின் பொருள் கடந்தும் உள்ளேயும் இருப்பவர்"**

   i. இறைவன் ஒருவர் தான் என்பதற்கு நூல்கள்ரீதியாக நான்கு சான்றுகள் தருக.

   ii. இறைவனின் மூவகைத் திருமேனிகளையும் தந்து விளக்குக.

   iii. பாடசாலைகள் எவ்வாறு சமயத்தை வளர்க்கின்றது?

(4+4+2 = 10 புள்ளிகள்)

4) **"சைவம் வளர்த்த பெரியார்களில் ஆறுமுகநாவலரும் ஒருவர் ஆவார்"**

   i. ஆறுமுகநாவலரின் சமயப்பணிகள் **நான்கு** தருக.

   ii. ஆறுமுகநாவலர் செய்த கண்டண நூல்கள் **மூன்று** தருக.

   iii. ஆறுமுகநாவலர் உரை எழுதிய நூல்கள் **மூன்று** தருக.

(4+3+3 = 10 புள்ளிகள்)

5) **“நல்ல நால்வர் சொற்படி நாம் நடக்க வேண்டும்”**

i. திருஞானசம்பந்தர் ஏன் சமயத்தின் முதற் குரவர் ஆனார்?

ii. திருஞானசம்பந்தர் புரிந்த **மூன்று** வாதங்களும் எவை? அவற்றுக்குரிய பாடலடியினைத் தருக.

iii. திருஞானசம்பந்தரின் சமூகப் பணிகள் **நான்கு** தருக.

(2+4+4 = 10 புள்ளிகள்)

6) **“நோன்பெனப்படுவது கொன்று தின்னாமை”**

i. விரதம் என்பதற்கு ஆறுமுகநாவலரின் கருத்து யாது?

ii. குலப்பண்டிகை விரதத்தின் நியதிகள் யாவை?

iii. கந்தசஷ்டி விரதம் அனுட்டித்தால் உட்பகை ஆறும் நீங்கும். அவை யாவை?

(3+4+3 = 10 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக

i. திருமூலர்

ii. வாழ்வியற்சடங்குகள்

iii. புறச்சந்தானகுரவர்

iv. பஞ்சாங்கம்

(5+5 = 10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන